நான் உணர்ந்த ஒரு கருத்தை பகிர விழைகிறேன்.

தற்போது அனைத்து தனியார் பள்ளிகளிலும் இந்தியை ஒரு பாடமாக வைப்பதை பெருமையாக பள்ளி நிர்வாகமும் பெற்றோரும் கருதுகிறார்கள். அதை ஆயிரம் பெரியாரும், அண்ணாவும் வந்தாலும் மாற்ற இயலாது. இதைப் பற்றி விபரமாக விவாதிக்க நான் எப்போதும் தயார்.

பொதுவாக தமிழர்கள் கருதுவது
இந்தியால் தமிழ் குறையும், அழியும் என சிலர் கூறுவதை நான் பணிவோடு மறுக்கிறேன்.
எந்த மொழியாலும், எந்த கொம்பனாலும் தமிழையோ தமிழ் பெருமையையோ குறைக்கவோ அழிக்கவோ முடியாது.
ஆனால் அதன் விளைவை வேறு விதத்தில் காண்கிறேன். இந்தியை சிறிய வயதில் கற்பதால், குழந்தைகளின் ஆங்கில புலமை குறைய பெருமளவில் வாய்ப்புள்ளதை ஏன் பலரும் உணரவில்லை என்பதே என் ஆதங்கம்.
தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் ஒரு வசதி உள்ளது. ஆனால் இந்தியும் ஆங்கிலமும் சிறு வயதில் கற்கும்போது பல வித முரண்பாடுகள் வருவது உறுதி. தமிழில் மரம் என்பதை ஆங்கிலத்தில் ma ra m என உச்சரித்து படிக்கலாம். ஆனால் இந்தியில் ம ர ம என்றுதான் எழுத்துக்கூட்ட இயலும். பெரியவர்களுக்கு அவ்வளவு பிரச்சனையில்லை. இந்தி படிப்பதால் ஆங்கிலம் பாதிக்கும் என 34 வருடங்கள்

ஆங்கில ஆசிரியராயிருந்த நான் உணர்ந்தேன். தமிழர்கள் வட நாட்டில் கொடிகட்டி பறக்கின்றனர். அது ஆங்கில புலமையாலேயேத் தவிர இந்தி தெரிந்ததால் அல்ல. இத்தனை ஆண்டுக்குப் பிறகும் எனக்கு சரியாக இந்தி தெரியாது. ஆனால் நான் வட நாட்டில் பல மாநிலங்களில் வெற்றிகரமாக வாழ்ந்து வந்தேன். நான் இந்தியை ஒரு மொழியாக படித்ததேயில்லை. அதற்காக நேரம் செலவழித்ததில்லை. ஆனால் இன்று குழந்தைகள் இந்தி நிமித்தம் படும் பாட்டை பார்த்து நொந்து இதனை பதிவு செய்கிறேன்.

அப்படி சிறு வயதிலேயே இந்தி படிப்பதன் மூலம் என்ன பயன்?

1. வட நாட்டில் கூலி வேலை செய்யலாம்.
2. அங்கு அவர்களுக்கு அடிமையாக இருக்கலாம்.
3. ஆங்கிலம் வராமல் தடுமாறலாம்.

பெற்றோர்களே, சிந்தியுங்கள். அந்த நேரத்தை ஆங்கிலம் கற்றுத்தருவதில் செலவழியுங்கள். மற்ற பாடங்களை, திறமைகளை நன்கு பயில வையுங்கள். குழந்தைகளை மூன்று மொழிகளை சிறு வயதிலேயே திணித்து ஆர்வத்தை குறைக்காதீர்கள்.

இது குறித்து மேலும் விபரம் வேண்டும் என்றால் என்னோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி